**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை**
**முன்னிலை – திரு. S.முகமது யூசுப் நவாஸ், B.A.,B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை**

**2025ம் ஆண்டு ஜீலை 08ம் நாள் செவ்வாய்கிழமை**

**இடைக்கால மனு எண். 4/2025**
**இன்**
**அசல் வழக்கு எண். 63/2019**

1.N.ரோஜம்மாள்
2.R.முனியாண்டி ...... மனுதாரர்கள்/வாதிகள்

**/ எதிர் /**

A.G.கார்த்திகேயன் ...... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு என்முன்பு 27.06.2025 இன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரார்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.தங்கபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.சரவணக்குமார் அவர்கள் ஆஜராகியும், ஆஜரின்மையாலும், எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினாலும் ஒருதலைபட்சப் படுத்தப்பட்டுள்ளநிலையில், மனுதாரர்கள் தரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

**1.** மனுதாரர்கள் தரப்பில் கட்டளை 9 ரூல் 9 மற்றும் பிரிவு 151 உரிமையியல் விசாரணை சட்டத்தின் படி இவ்வழக்கில் கடந்த 27.08.2024ம் தேதியன்று மனுதாரர்கள் தரப்பு ஆஜரின்மை காரணமாக தள்ளுபடி செய்யப்பட்ட மேற்படி அசல் வழக்கினை தொடர்ந்து நடத்த ஏதுவாக மீண்டும் நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கும்படி (Restore) உத்தரவு வேண்டி அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள்.

**2. மனுவின் சுருக்கம்:**

தாவா வழக்கில் கடந்த 20.08.2024ம் தேதியன்று Check slip pending என்று குறிப்பிடப்பட்டு வாய்தா ஏற்பட்டிருந்தநிலையில், அன்றையதினம் 1ம் மனுதாரர் சென்னையில் இருந்த காரணத்தினால் ஆஜராக இயலவில்லை என்றும், தனது வழக்கறிஞரும் ஆஜராக முடியாமல் போய்விட்டது என்றும், 27.08.2024 அன்று மீண்டும் அதே காரணத்துக்காக வாய்தா ஏற்பட்டு அன்றையதினம் எதிர்பாராத விதமாக தனது வழக்கறிஞர் வருகைக்கு முன்பாக தனது வழக்கு

அழைக்கப்பட்டு தானும் ஆஜராகவில்லை, தனது தரப்பில் வழக்கறிஞரும் ஆஜராகி உரிய விளக்கம் இல்லை என்ற காரணத்தினால் மேற்படி அசல் வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், எனவே அசல் வழக்கினை தொடர்ந்து நடத்த ஏதுவாக மீண்டும் நீதிமன்ற கோப்பிற்கு எடுக்க வேண்டி தாவா மனுவை அனுமதித்து உத்தரவிட வேண்டும் என்று மனுதாரர்களால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரின்மையாலும், எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினாலும் ஒருதலைபட்சப்படுத்தப்பட்டுள்ளார்.

**<u>4. இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை : இம்மனு அனுமதிக்கத்தக்கதா / இல்லையா என்பதேயாகும் :-</u>**

மனுதாராார்கள் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்கத்தகுந்த நிலையில் உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் இல்லை. எனவே நீதியின் நலன் கருதி இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்படுகிறது.

> "Audi alteram partem is a Latin phrase meaning 'listen to the other side', or "let the other side be heard as well". It is the principle that no person should be judged without a fair hearing in which each party is given the opportunity to respond to the evidence against them."

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் தாவா மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ஜீலை 08 ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.07.08 18:16:02 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.07.08 18:16:12 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

**DISTRICT MUNSIF COURT**
**MANAMADURAI**

## ORDER

**I.A.No.4/2025**
**in**
**OS. No.63/2019**

**Dated: 08.07.2025**